ஓலை 48 | ஓசை 165 | துலை [நவம்பர்] 2023

# அகர முதல இலக்கிய பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கிய பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

# தினம் ஒரு திருக்குறள்



**விழுப்பேற்றின் அஃதொப்பது இல்லையார் மாட்டும்**
**அழுக்காற்றின் அன்மை பெறின்.**

யாரிடத்திலும் பொறாமை இல்லாதிருக்கப் பெற்றால்,
ஒருவன் பெறத்தக்க மேம்பாடான பேறுகளில் அதற்கு ஒப்பானது
வேறொன்றும் இல்லை.

### Translation:

If man can learn to envy none on earth,
'Tis richest gift, -beyond compare its worth.

### Explanation:

Amongst all attainable excellence
there is none equal to that of being free
from envy towards others.

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

நிர்வாக குழு

கு.செல்வமுத்துக்குமரன்

சிவம் அறக்கட்டளை

ஆசிரியர்கள்

அ.வில்சன்

குமர.தர்மசீலன்

வடிவமைப்பு

அ.வில்சன்

அலுவலக முகவரி

எண்.2 அய்யரப்பர் மேலவீதி, பெரியகண்ணாரத்தெரு

திருவாரூர் மெயின் ரோடு, மயிலாடுதுறை.

# அகர முதல இலக்கிய பேரவை

Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# ஆதிசிவன் நீதானே

உயிரிட்டாய் உத்தமனே உலகினிலே வந்துதிக்க
பயிரிட்டாய் நற்குணங்கள் பாரினிலே சிறந்தோங்க
அயராத உழைப்பாலே அடித்தளமும் தானிட்டாய்
உயர்விற்கே எந்நாளாம் உயிரோட்டை தான்தேய்தாய்

மின்சாரம் போல்பாயும் மிரட்டுகின்ற பார்வையதும்
நின்றங்கே வாழ்வினையும் நெறிபடுத்தும் மறைப்பொருளாய்
இன்பத்தை நான்சுவைக்க இடர்தாங்கும் வேரானாய்
துன்பத்தை தனக்குள்ளே தூண்போல தான்சுமந்தாய்

ஆதவனாய் நீயிருத்தே அருளினாயே ஒளிக்கீற்றை
ஆதலினால் எனக்கென்றும் ஆதிசிவன் நீதானே
ஓதுவார்கள் போல்நானும் உனைதுதித்தே வணங்குகிறேன்
போதாதே இப்பிறவி பொக்கிஷமே உனைப்பாட



கைப்பிடித்து நடைப்பழக்கி காலூன்ற வைத்தவரே
மைப்பிடித்து நான்பயில மையிருட்டின் மெழுகானாய்
கைப்பக்க நிழலாக காலமெல்லாம் வருபவரே
வைப்பகமாய் உன்னன்பே வழிநடத்திச் செல்கிறதே

உன்னருமை நானறிய உறவொன்றும் வந்ததுவே
என்வாழ்வின் நான்முகனே ஏற்றிவைத்தாய் புதுப்பாதை
தன்னலமே இல்லாத தாங்கிடுமோர் நிலம்போல
முன்மொழிந்தாய் தியாகத்தை முடிவின்றி எமக்காக

ஆழ்ந்துணர்ந்த பின்னாலே ஆண்டவனும் நீயென்றே
ஆழ்மனமும் மெய்யறிய அகத்திற்குள் ஓருணர்வு
ஊழ்வினையின் பெரும்வரமாய் உயிர்தழுவும் ஓருறவே
வாழ்க வாழ்க பல்லாண்டு வாழ்த்துகிறேன் கவிக்கொண்டு

கவிஞர் பூர்னிமா சங்கர், கோயம்புத்தூர்

# துளிப்பாக்கள்

மீசையில் ஒற்றை நரைமுடி.
இளமை உதிர
துளிர்க்கிறது முதுமை.
/
உன் நகங்களுக்கு
வலிக்குமென்றே
நான் பூக்கள் பறிப்பதில்லை.
/
காற்று தீண்டுகிறது
மலர் சிணுங்குகிறது
வண்டு தேனெடுக்கிறது.
/
பூக்களின் மடியே
கதியென்றிருக்கும்
வண்டுகளுக்கு காதல் மயக்கம்.
/
யாருமற்ற சாலையில்
விபத்தின்றி பயணப்படுகிறது
காற்று.
/
அவள் கூந்தலில்
சூடிப்போவது
மலரல்ல என் மனது.



பிள்ளையார் சுழியுடன்
தொடங்கியது
நாத்திகக்கவிதை.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# தன்முனைக் கவிச்சாரல்

ஊர் பெருந்தனக்காரர் பரம்பரை, பரம்பரையாக வாழ்ந்து வரும் பெரிய அரண்மனை போன்ற வீடு. எப்பொழுதும் நூறு பேருக்குக் குறையாமல் வாழ்ந்த இடம். கலகலப்பிற்கும் பஞ்சமில்லை. வாக்குவாதத்திற்கும் குறைவில்லை. நல்லது, கெட்டது அனைத்தையும் பல தலைமுறையாக கண்டது.

காலத்தின் மாற்றம் காரணமாக பின் வந்தவர்கள் படிப்பு, திருமணம் எனப் பல காரணங்களால் அயலூர்களுக்கும், அயல்நாடுகளுக்கும் சென்று விட சிறிதும் சத்தமின்றி, யாராவது வருவார்கள் என்ற காத்திருப்புடன் அனைத்திற்கும் சாட்சியாக இன்றும் பொலிவு குறையாமல் நிமிர்ந்து நிற்கிறது அந்த வீடு. இல்லையில்லை அரண்மனை.

மொத்தத் தனிமையைக்
குத்தகைக்கு எடுத்துள்ளதோ
யாருக்காக காத்திருக்கிறது
இந்த ஒற்றையடிப் பாதை!



கவிஞர் அன்புச்செல்வி சுப்புராஜு, சென்னை

# விலங்குகள் நேசிக்கப்பட ஆன்மா விழிக்கட்டும்

உள்ளத்தின் கதவுகள்
உண்மையில் திறக்கப்படும்
உள்ளேயே விழிகள்
உளமார நேசிக்கட்டும்.

விலங்குகள் மனதில்
விழிப்புணர்வு ஏற்படுத்தட்டும்.
விரிந்த உலகின்
விசுவாசிகள் ஆகட்டும்.



ஆறறவின் மானுடம்
ஆழமான கடலில்
அன்பு முத்தை
அகழ்ந்தே எடுக்கட்டும்.

அல்லி மலர்
அலரும் வேளையிலே.
ஆர்வமுள்ள உதவிகள்
ஆத்மாவின் அடையாளமாகட்டும்

வித்தியாசமான குணங்கள்
வில்லங்கமான வெளிவந்தாலும்
மிருகங்களிடம் வீசுவோம்
மின்னலாய் நேசங்களையே.

கவிஞர் இரஜகை நிலவன்,மும்பை

# பேசும் மொழி

யாரோ ஒருவரால்
வளர்த்துக் கைவிடப்பட்ட
பூனையொன்று
வழக்கமாக அவ்வப்போது
தூரத்து சொந்தம் போல்
வீட்டுக்கு வரும்,
ஞாயிற்றுக் கிழமை
அதுவுமாய்
காலை எட்டு மணிக்கு
இட்டியும், தேங்காய் சட்டியின்
தயாரானதும்
வாசலில் இருந்து
தொடர்ந்து பேசுகிறது.
என் மனைவியோ
யாராவது பூனையை
அடித்திருப்பார்கள்
என்கிறாள்.
நானோ
பூனை இன்று
ஏன் கறி எடுக்கவில்லை ?
என்று
என்னிடன் கேட்பதாக
உணர்கிறேன்.



கவிஞர் இரா.மதிராஜ்,காங்கேயம்

# நன்றி சொல்

ஒவ்வொரு தாமதத்துக்கும்
நன்றி சொல்
ஏனெனில்
அது உனக்கு வெற்றியைப்
பரிசளிக்கலாம்
அது உனக்கு நேசத்தைப்
பரிசளிக்கலாம்
அது உனக்கு வெளிச்சத்தை
அறிவிக்கலாம்
அது உன் பாதையைத் தெளிவாக்கலாம்
அழகிய உறவொன்றைத் தருவிக்கலாம்
ஏன்
உன்னுயிரைக்கூட சில காலம்
மேலும் வாழ்விக்கலாம்

உனக்கானது ஒருபோதும்
உன்னைக்கடந்து போகா
எதை வேண்டுமானாலும்
நம்பாதிருங்கள்.
இறைவனின் அருளில்
நம்பிக்கை இழக்காதீர்கள்!




கவிஞர் மரு ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# பெருவாழ்வு

இருப்பு நிஜம் என்று எண்ணி
எண்ணிலடங்கா ஆசைகள் வளர்த்து
அதைத் துரத்தும் நாம்!
அகத்தில் எதிர்பார்ப்புகளை
அதிகரித்து கிடைக்காத
ஏமாற்றத்தில் தவிக்கிறோம்!
அடங்க மறுக்கும் நினைவலைகள்
நீர்மத்தின் மேலெழும்பும் குமிழியாய்
பட்டென்று உடைந்து போக!
உணர்வுகளை இழந்து
கனவுகளைத் தொலைத்து
வாழ்வது எதற்கென்ற விரக்தியில்!
மனம் தளர்ந்து போனோம்!
எண்ண அலைகளை அடக்கி
மனச்சலனமற்று இருப்பதே வாழ்க்கையென்று தெளிந்து
தொடர்ந்திவோம் வாழ்வுதனை!



கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை.119

# வாழ்க்கை

எத்தனையோ துன்பங்களை
கடந்துவிட்டேன்; இருந்தும்
மனதில் ஏதோ ஒரு பயம்.
இந்த வாழ்க்கை இன்னும்
என்னவெல்லாம் கற்றுத்
தரப்போகின்றதோ என்று!



கவிஞர் ஸ்ரீவள்ளி, கோவை

# நானும் என்றேன் நாணம் என்றாள்



நாணம் கொண்ட பார்வையால் மயங்கினேன்
அவளிடம் பேச தயங்கி நின்றேன்
கண்ணாலே பேசி புரிய வைத்தேன்
நிலாவைப் போன்ற முகத்தை ரசித்தேன்
பிரிய முடியாமல் தவியாய் தவித்தேன்
இருவரின் காதல் இதயமாய் சேர்த்து
வானத்து நட்சத்திரம் ஒன்றாய் சேர்ந்து
எங்களை வாழ்த்துச் சொல்லி அனுப்ப
மகிழ்ச்சியோடு உலா வந்து அவளை
கரம் பிடித்து நடக்கும் போது
நாணம் கொண்டவனாய்
சிரிப்பு மழையில்
நனையாமல் நனைந்து நின்ற நொடி
எனக்குள் அவளை இணைய வைத்தது

கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# பாவலராக

பாசத்தமிழும் கவிதைக்கு பாலமாக
பாவையவள் முன்னேற்றத்திற்கும்
பார்த்து படிப்பவர்க்கும் உவமையாக
பார்த்தவுடன் பரவசப்படுத்திடவும்
பாதையை வளப்படுத்திடவும்
பாக்யதையும் கொடுத்ததே
பாதி வாழ்வில் நுழைந்தாலும்
பார் போற்ற வாழ்ந்திட திடம் வந்ததே
பாகமானதே வரிகளும் வளமானதாக
பாரதத்திலே பெயரையும் சுழல் வைத்ததே
பாகலாக தொடர்ந்தேறியதே வாழ்விலே
பாசன நீராக விழுந்ததே கவிதையுமே
பாடுபட்டே உழைத்தேனே பாவலராகவும்
பாட்டாளியாக பாடுபட்டேனே
பாதம் பணிந்தேனே படைத்தவனும்
பாலத்தில் ஏற்றிடுவானே இஷ்டதெய்வமுமே!



கவிஞர் நீலாசுபாஷ், ஆக்கூர்

# எனது உலகம்!

உயர்ந்த நிலத் தோற்றம் பறந்திருக்கிறது
அதில் மலை தொடர்கள் படர்ந்து செல்கிறது

ஒற்றையடி பாதை நீண்டு செல்கிறது
அதன் இரு மருங்கிலும் பூக்கள் பூத்து சிரிக்கிறது

சுத்தமான காற்றினால் சுவாசத்திற்கு தடை இல்லை
குளிர்ந்த தென்றலால் குளிர்ச்சிக்கு குறையில்லை

உயர்ந்து நிற்கும் விருச்சகங்களோ
கீச்சிடும் பறவைகளின் இல்லமானது

முற்றத்து மல்லிகை மனம் ஒரு புறம்
மண்வாசனையின் ஈர்ப்பு மறுபுறம்

கார்மேகங்களோ நலம் விசாரித்துவிட்டு
மழைத்துளிகளால் எம்மை வாழ்த்திச் செல்கிறது

மழைத்துளிகள் மண்ணில் பட்டதும்
மண் குளிர்ந்து விண்ணுக்கு நன்றி சொல்கிறது

மிருகங்களும் பறவைகளும் உற்ற தோழர்களாகி
குடும்ப அங்கத்தவர்களாக வாழ்கிறது

ஓரடுக்கு வீடு இங்கு மாளிகையாகி
எளிமையான வாழ்வு இதனுள் எழிலானது

கருணையும் கண்ணியமும் புடைச்சூழ்ந்து
ஏற்றத்தாழ்வின்றிய ஒற்றுமையை வளர்கிறது

இங்குள்ள ஒவ்வொரு அம்சமும்
என் நந்தவனத்தை செப்பனிட்டு செதுக்குகிறது

இயற்கையும் செயற்கையும் கைகோர்த்து
மண்ணில் சுவர்க்கம் இதுவென்றானது

நான் பிறந்து வளர்ந்த எனது கிராமமே
அன்பு நிறைந்த என் உலகமானது



கவிஞர் அகீலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம் (இலங்கை)

# மௌனத்தின் காரணம் என்னவோ



தவணை முறையில் பேசிய
பேச்சுக்கள் எல்லாம்,
மௌனமொழி பேசக்காரணம் என்னவோ?
தளராமல் பேசும் உனது பேச்சு
என்னிடத்தில் மட்டும் தடுமாறிய
காரணம் என்னவோ?
முழுமதியைப்போல் இருப்பாய்
இப்போது முகம் காட்ட மறுக்கும்
காரணம் என்னவோ?
நீ என்னை விட்டு தொலைந்த போது
எனக்கு தோன்றிய கேள்விகளுக்கு
பதில் என்னவோ?
கேள்விகள் தொடரும் எனக்குள்
நீ பதில் தரும் வரை.

கவிஞர் க.வீரபாண்டி,புளியங்குளம்(மதுரை)

# காதல் நினைவுகள்

பத்து வருட வறட்சியின்பின்னர்
பக்குவமாய் அவனை
பார்க்க நேர்ந்த தருணம் இது
அதுவே மக்கள் செறிந்த
மன்றத்தின் பிரதம அதிதியாக.



உயர்வான இடத்தில் உயிரானவன் இருக்க
அவளோ விழாவுக்கு
ஒரு வாசகியாக ஓரம் ஒதுங்குகிறாள்.

ஆயிரம் கண்களுக்கு அவன்
முகம் மாமேதையாக தெரிய
அவளுக்கோ கடவுளின் தரிசனம்
கண்முன்னே கிடைத்தால் போல் உணர்ந்தாள்.

ஒலிவாங்கி மூலம் அவன்
குரல் மண்டபம் முழுவதுமாய்
அவளுக்கோ மனதுக்குள்
ஒலித்த குரல் மனம் தாண்டி
ஒலிக்கிறது போலானது.

ஒரு நொடி அவளை அறியாமலேயே கடந்த
காலத்துக்குள் மூழ்க
அந்த நொடியே அவன் பிறந்ததற்கு அர்த்தம்
புரிந்ததாக உணர்ந்தாள்.

ஆயிரம் கேமராக்கள் சுற்றுச் சுற்றி ஒளிவட்டம் வீச
கண்ணீரை யாருக்கும் தெரியாமல் மறைக்கிறாள்.
தனிமையில் அவனை கண்டு இருந்தால்
அவனிடம் சொல்லி புரிய வைத்திருப்பார்
யார் என்பதை; இதோ நிறைந்த மக்கள் கூட்டம்.

அவனுக்கு எப்படி புரிய வைப்பாள்
உன்னுடன் சிறிது காலம் அலைபேசியில்
அங்கலாய்த்துக் இருந்தாலும்
என் மனம் முழுவதும் நீதான்
குடியிருக்கிறார் என்பதை.

நேரங்கள் செல்ல செல்ல
மரணத்திற்கு நேரம் குறித்தல் போல்
ஒவ்வொரு நிமிடத்தையும் நினைத்து வருந்துகிறாள்
நிமிடங்கள் கூட வருடங்களாக கூடாதா என்று.

மண்டபத்திற்கு விடைகொடுக்க பிரதம அதிதிக்கு
பிரியாவிடை வழங்க
அவளோ தன் பிராணமிற்கு
பிரியாவிடை வழங்கியதுபோல்
நடைபிணமாய் நகர்கிறாள்.

கவிஞர் நுஸ்ஹா அஸீம்,ஓட்டமாவடி

# சிலப்பதிகாரம் (பதினாறு)

15. அடைக்கலக் காதை.
1. கோவலன், மாடலன் சந்திப்பு:
பாண்டிய மன்னன் நீதி வழுவாத ஆட்சியில் வாழும் மக்கள்
வேண்டியது எல்லாம் கிடைக்க, வேறு ஊர் செல்லாத மக்கள்
ஆண்டியானாலும் தன் நாட்டை விட்டு போகவிரும்பாத மக்கள்
பாண்டித்திய மாடலன், நண்பனை கோவலன் சந்தித்தான் .

2. மாடலன் மாதவிபற்றி கூறல் :
கோவலனே மாதவி கருவுற்று பெண் மகவை ஈன்றெடுத்தாள்
காவல் தெய்வம் கலம் உடைந்து தத்தளித்தவர்களைக் காத்தாள்
பாவலர் போற்றும் மணிபல்லவம் எனும் தீவில் வாழ்பவள் அவள்
மாவலர்கள் ஆயிரம் பேர் அவள் பெயரை சூட்டினர் "மணிமேகலை"
(மாவலன் : வல்லவன் )



3. கோவலன் வீர பிரதாபங்கள் மாடலன் செப்புதல் :
முதியவர் ஒருவர் தண்டுகால் ஊன்றி வீதியில் நடந்து வருகிறார்
மதி மயங்கிய யானை ஒன்று பாகனை மீறி வேகமாக பிளிறி ஓட
அதிர்ந்து அலறும் அவரை தன் துதிக்கையில் பிடித்து வளைத்தது
எதிரில் வந்த கோவலன் யானையை அடக்கி அவரைக் காத்தான்

4. அந்தணப் பெண் தேவந்தி துயர் தீர்த்தலை செப்புதல்
செல்லமாக வீட்டில் வளரும் கீரிப்பிள்ளை குழந்தைக்கு காவல்
மெல்லமாக குடத்தில் நீர் கொண்டுவரும் அவள் திடுக்கிட்டாள்
நல்லவன் என்று நம்பிய கீரியின் வாயில் இரத்தம் வடிகிறது
வில்லனாய் கீரிப்பிள்ளை குழந்தையைக் கொன்று விட்டதே

பதறியவள் குடத்தால் கீரியை அடித்ததால் அது மாண்டது
கதறியபடி உள்ளே சென்று பார்க்க குழந்தை சிரித்தது
சிதறிய இரத்தம் இறந்த கீரியைக் கண்ட அந்தணன் சினந்தான்
வறியவள் அவளைவாடவிட்டு பிரிந்துசென்றான் கணவன்
அறிந்த கோவலன அவளை குழந்தையை காத்தருளினான்

5. பொய்யுரைத்தவனை புடைத்துண்ணும் பூதம்
பத்தினியைப் பழித்து கணவனிடமிருந்து பிரித்தான் ஒருவன்
வத்திவைத்த அவனை காவல் பூதம் புடைத்து தின்ன
பெத்தத் தாய் கதறியதில் மனம் இளகினான் கோவலன்
பித்தனாக , என்னை எடுத்துக்கொள் அவனை விட்டுவிடு
உத்தம பூதம் மறுக்க அத்தாய்க்கு இறுதிவரை உதவினான்

6. கோவலன் கண்ட தீங்கனவு "
"புண்ணிய செயல்கள் செய்த நீ நீடு வாழ்க!" என்றான் மாடலன்.
"எண்ணியபடி வாழ்வேனா? கண்ட தீய கனவால் ஐயுறுகிறேன்
அந்நியன் ஒருவனால் பழிச்சொல்லுக்கு ஆளாகிறேன் நான்
கண்ணகி துன்புறுகிறாள், மாதவி தன் மகள் மணிமேகலை
கண்ணியமான புத்ததேவனிடம் அளிக்க துயிலேழுந்தேன்"

7. கோவலனும் கண்ணகியும் மாதரியிடம் தஞ்சமடைதல் :
அங்கு வந்த இடையர்பெண் மாதரி அடிகளை வணங்கினாள்
"தங்குவதற்கு இடம் தேடும் இவர்களை உன்வசம் தருகிறேன்
சங்கு சுட்டாலும் வெண்மை போல் இவர்கள் மேன் மக்களே
மங்காத கோவலன் மதுரை செல்ல இவளைப் பார்த்துக்கொள்."

...தொடரும்

கவிஞர் ந.திருக்காமு

# யூகி

உள்ளதைக் கொண்டு
உள்ளம் திருப்திபெற
யூகித்துச் செயலாற்றும்
யுக்தி பெற்றிடு

நாளைய பொழுதை
நலமாகக் கழித்திட
நாளும் நன்னயம்
செய்திடத் துணிந்திடு

இன்னல் நிறைந்த
இன்றைய வாழ்வில்
யூகியாகத் திட்டமிட்டு
யோகியாக வாழ்ந்திடு



கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹர்,இலங்கை

# கோபத்தில் அவளின் அழகு!

கோபத்தில் அவளின்
முக அழகோ! - கோவாவின்
அழகையும் மிஞ்சுகிறதே.



கவிஞர் முனைவர் க குமார்,சித்தாலிக்குப்பம்

# எரிந்த இதயம்

மின்சார வேலியிட்ட இதயம் என நினைத்தேன்
கடினமாக நுழைந்தேன் சில நிபந்தனைகளுடன்
அவ்விதயம் பூட்டிய முகங்களுடன் இருப்பதை காணாமல்
ஏற்றுக்கொண்ட இதயம் என நினைத்து
இன்றியமையாமல் காதல் செய்தேன் கண்ணியமுடன்
கலங்கவிட்டாள் கதறி அழுதேன்
இன்றும் கண்ணீர் குளமாய்
என் வலிகளை வரிகள் மூலம் ஆற்றுகிறேன்
எரிந்த இதயம்
விரிந்த வலிகள்
சரிந்த உடல்
இவைகள் சந்திப்பதில்லை
தனித்தனியே உணர்த்துகின்றன வலிகளை.



கவிஞர் இர மணிகண்டன்,வங்கனூர்

# மாலவனும் வைணவமும்!

ஆழ்வார்கள் பன்னிருவர் முதலாழ்வார் மூவரினில்
இரண்டாமவர் பூதத்தார்! பின்பற்றல் வைணவமே!
மால்பக்தி! மாமல்லை தோன்றியவர்! நாலாயிரம்
இரண்டாவது திருவந்தாதி யாத்திட்டார்! ஒருநூறு
வெண்பாக்கள் கொண்டதது! விசிஷ்டாத்வை தத்துவமே
ஏற்றிட்டார்! ஆசாரியர் மாண்சேனை முதலியாரே!
தலசயனப் பெருமாள்தன் கோவிலினில் அறிவிப்புப்
பலகைதனில் அறிவிப்பே! மாலவனின் ஆயுதமாம்
கதாயுதம் கௌமோதகி அம்சமவர்! துய்தமிழின்
பற்றாளர்! பொய்கையார் பேயாழ்வார் காலத்தவர்!
ஞானபக்தி வைராக்யம் துறவறமும் மாலவனின்
ஆழ்நினைப்பு கசிந்துருகி கனிந்தமைந்த பண்பினரே!
உண்டியுலை உவப்பிலாழ் சாமான்யர் கலப்பின்றி
ஓரிடத்து உறையாது சஞ்சாரம் மேற்கொள்ளும்
மற்றிருவர் அறியாத தன்மையரே! கப்பியதோர்
காரிருளைப் போக்கிடவே அன்பென்னும் தகழிதனில்
ஆர்வமாம் நெய்பெய்து சிந்தையாம் திரியிட்டு
ஞானதீபம் ஏற்றினார்! புறயிருளை நீக்கியவர்
பொய்கையார்! அகயிருளைப் போக்கியவர் பூதத்தார்!
மாலவனின் காட்சியது நண்ணியதே! பூதத்தார்
அன்பொளியில் கண்கட்குப் புலனானது! திருக்கோவில்
நன்மங்களா சாசனங்கள் பதின்மூன்று மூன்றுபத்து
பாசுரங்கள் வட்டித்தார்! எழாவது நூற்றாண்டின்
ஐப்பசியின் வளர்பிறைதன் நவமிதனில் புதன்கிழமை
மல்லிகைபுதர் நடுவமைந்த குருக்கத்தி நீலோத்பல பூநடுவே
தோன்றிட்டார் பூதத்தார்! உலகவாழ்வு நேர்தவிர்த்து
பக்திசாகரர் என்றானார்! பாசுரங்கள் எளிமையொடு
மிக்கினிமை வாய்த்தவையே! தன்னையவர் பெருந்தமிழன்
நல்லேனென அறிவித்தார்! யாப்புகற்று நேர்சுவைத்து
மாலவனின் வைணவநெறி சார்ந்தேநாம் மிளிர்வோமே!



...தொடரும்

கவிஞர் கணக்காயன் (இ.சே.இராமன்)

# குப்பையை பிழை திருத்திய புத்தகம்!

யாரும் காணாத வானத்தில்- நான்
வானவில்லை தேடிக்கொண்டிருக்கிறேன்

குறைகளை மூட்டைகளாய் தேடிவிடும்
குப்பைத்தொட்டியில்
சரியாகிவிடுமெனும் வைரம்
பட்டை தீட்டாமல் கிடைக்கிறது

பாதம் நிரப்பி
வனாத்தை பார்த்து கையுயர்த்தி
இணைத்துவிட என்னும்
குழந்தைப் போலதான்- நான்
வானவில்லை பிடித்து மகளின்
கையில் கொடுத்து நகர்கிறேன்

பசை நிரப்பிய
கோப்பையில்
ஒரு ரசிகனின் முகமெல்லாம் ஒட்டப்படுகிறது
புன்னகைத்துக் கொண்டு இருக்கும்
கதாநாயகனுக்கு முன்னால்
முறைத்துக் கொண்டிருக்கிறான்
பசைபோர்த்திய வில்லனொருவன்

வானத்தை மடித்து
குப்பைத்தொட்டியில் எறிந்த பிறகு
வருத்தம்பெற்று
பறக்க நினைக்கிறது
இவைகளை மொத்தமாய்
உள்ளடக்கிய குப்பைத் தொட்டியில்
ஓர் புத்தகமொன்று.



கவிஞர் சே கார்கவி கார்த்திக்

# தீதும் நன்றும் பிறர்தர வாரா

இன்பம் தரும் உறவுகளும் உண்டு
துன்பம் கண்டு மகிழ்வோரும் உண்டு
எவரெவர் எப்படியென்று எடை போடு
அவரவர் இயல்புக்கு ஏற்ப நடைபோடு
அன்பை என்றும் விதைப்பார் சிலபேர்
அம்புவிட்டு அனுபவம் தருபவர் பலபேர்
காயங்கள் ஏற்பட்டாலும் சாயம் போகாதே
மாயமாய் என்றும் துன்பங்கள் மறைந்திடும்
எவரையும் வெறுத்து ஒதுக்கி வைக்காதே
அவரே உன்னை செதுக்கி வைப்பாரே
எதிர்நிலை மாந்தரும் வாழ்தலுக்கு அவசியம்
வாழ்வில் உயரவே அதுவே ரகசியம்
நன்றும் தீதும் பிறர்தர வாரா
உள்ளம் உறுதியாயின் துன்பங்கள் தாரா
உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ
உழைத்து சிறந்தால் இன்பங்கள் பலவே




கவிஞர் குரு.ஜெயந்தி,சிதம்பரம்

# ஊழலும் லஞ்சமும் இல்லையெனும் நாள்வருமா?

கடமையைச் செய்யாமல் காலதாமதம் செய்து
உடனே முடிப்பதற்கு பெறுகின்றார் கையூட்டு!
கேட்டதும், கேட்டதைக் கொடுப்பதற்கு ஆளிருந்தால்
நாட்டில் ஊழலும் லஞ்சமும் ஒழிவது சாத்தியமா?
தாமத்தை, அலைச்சலைத் தவிர்த்திட நினைப்போரும்,
விதிமுறை மீறல்களை நெறிப்படுத்த முயல்வோரும்,
அரசுத் துறைகளில் வேலைபெற விழைவோரும்,
அளிக்கின்றார் கையூட்டை! அவர்களின் விழுக்காடோ
அறுபத்து இரண்டு சதவீதம் என்றறிவோம்!
பரவலாகப் பயன்பாட்டில் நிறைந்துளதே இலஞ்சப்பேய்!
கட்டுமானப் பணிகளில், ஒப்பந்தங்கள் போடுவதில்
மட்டிலா ஊழல்கள் மலிந்துளதே நாடெங்கும்!
என்னென்ன வழிகளிலே ஈட்டிடலாம் பணத்தினையே
என்கின்ற எண்ணமே சிந்தையில் நிறைந்திருக்க
நல்வழியைப் புறந்தள்ளி செல்கின்றார் தீயவழி !
தகவல் அறியும் உரிமைச் சட்டம், சேவைபெறும்
உரிமைச் சட்டம் வெளிக்கொணர்ந்த ஊழல்பல!
அரசு அலுவலகங்களில் குடிமக்கள் சாசனம்
பார்வையில் படும்படி வைத்திடல் நலமளிக்கும்!
யாரிடம் முறையிட வேண்டுமென அறியாத
கிராமப்புற மக்கள் பாதிப்பை அடைகின்றார்!
லஞ்சம் வாங்குவது மட்டுமல்ல குற்றம்!
லஞ்சம் கொடுப்பதும் குற்றமெனும் விழிப்புணர்வை
ஆண்டுதோறும் கண்காணிப்பு விழிப்புணர்வு வாரத்தைக்
கடைபிடிக்கும் இவ்வேளை ஏற்படுத்தல் நன்றாகும்!
அறவழியில் பொருளீட்ட வலியுறுத்தும் வள்ளுவமும்!
கற்றவர்கள் இதையுணர்ந்து பணியாற்ற முன்வந்தால்
ஊழல், லஞ்சம் இல்லாத நிலையுடனே
தழைத்திடும் நம்தேசம்! நலமாகும் நம்வாழ்வும்!
ஊழலை ஒழித்திடுவோம்! உழைப்பால் உயர்ந்திடுவோம்!



கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

# வெறுமை நாள்கள்

நீ இல்லாத பொழுதுகள்!
நினைவு துயில் கொள்ளும்!
இலை உதிர்க்கும் மரம்!
அலை துறந்த கடல்!
புன்னகை மறந்த பூ!



கவிஞர் செ.தமிழ்நேயன்,தமிழ்நாடு

# உழவரைப் போற்றுக!

உலகில் தோன்றிய உயிர்கட்கெல்லாம்
உடலை ஓம்பிட உதவுவது உணவு.

பசி வந்திட பற்றும் இற்றிடுமன்றோ
பசிப்பிணியைப் போக்கும்
மருத்துவரே உழவர்.



வரப்புயர நீரும்
நீருயர நெல்லும்
நெல்லுயரக் குடியும்
குடியுயரக் கோன் உயரும்.

நாட்டின் பெருமை
நாட்டில் உழுவோரின்
கைப்பிடிக்குள் அடக்கம்.

சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்.
சுழன்றே பிறதொழில் செய்வார்க்கும்
உழுவாரே அச்சாணியாம்.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்
மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர் என்றே
இத்தொல்லுலகில் எழுதுண்ட மறையன்றோ!

அலகிலா மறை விளங்கும்.
பலகலையாந் தொகை விளங்கும்
உலகெலாம் ஒளி விளங்கும்
உழவர் உழும் உழவாலே.

காராள பயிர் வளருந் திறத்தாலே
பார் வளரும்.
காசினியில் ஏராலே சேறாக்கி
எருவாலே கருவாக்கி
நீராலே பைங்கூழை நிலைப்பார்
தமையன்றி யாராலே பசி தீர்வார்.

மேழியால் விளைவதல்லால்
வேறென்றால் விளையாவே!
ஓர்ந்தே உணர்ந்திடுக.
உழவரைப் போற்றிடுக.

கவிஞர் செ.கலைவாணி,மெல்போர்ன்

# தினசரி ஒத்திகை

காலத்தின் அருமையை
கருதியோர் வாழ்வில்
ஒத்திகையற்ற செயல்கள்
ஒன்றுக்கும் உதவாதென

வயதுகள் பேதமின்றி
வெற்றியையும் வசமாக்க
வாசல்கள் தோறும்
வழிந்தோடும் முன்னோட்டங்கள்

ஆளுக்கொரு சிந்தனைகள்
அவரவர் மனதினில்
வாழ்வெனும் மைதானத்தில்
வித்தைகள் புரிந்திட

தனக்கென ஒன்றினை
தரணியில் தக்கவைத்திட
வெட்டவெளி திசையெங்கும்
வெள்ளோட்டம் போகிறது

பள்ளிப் பாடங்களை
படித்திட துவங்கியதிலிருந்து
வாழ்நாள் முழுவதும்
வாழ்ந்திடக்கூட ஒத்திகைகள்

ஒவ்வொரு நாளும்
ஓயாத செயலால்
போலிகளும் அசலென
போராடி வெல்கிறது

மனிதன் மட்டுமின்றி
மண்ணிலுள்ள அத்தனைக்கும்
திறனை வளர்த்திட
தினமொரு ஒத்திகை



வீழ்த்திய தோல்விகளை
விலகியே கடந்திட
அருமருந்தென கிடைத்திடும்
அனுபவம் ஒன்றால்

உழுதிடும் மண்ணில்
உயிர்பெறும் துளிர்களும்
புதுவகை உரத்தால்
புத்துயிர் பெறுதே

மறுபிறவியைத் தந்திடும்
மருத்துவமும் தரமுயர்ந்து
தீராத நோய்க்கும்
தீவிரசிகிச்சைகள் கண்டோமே

நாட்டைக் காத்திட
நடைபெறும் பயிற்சியால்
அன்னை தேசமும்
அன்னியமாகாமல் இருக்கிறதே

விண்கோள்களை ஆராய
விரைந்த விண்கலனால்
அற்புதம் நிகழ்ந்ததுகூட
அனுதின ஒத்திகையாலே.

கவிஞர் கோவை ஆனந்தன்,கிணத்துக்கடவு

# தேசிய ஒற்றுமை

உதடு சொல்லுமே 'நான்' உதடு மூடாது.
'நாம்' என்று சொல்ல ஒற்றுமை ஓங்குமே.
நம் நாடு அடிமைப்பட்டு கிடந்ததே
ஒற்றுமை இல்லாத காரணத்தினால் தானே?
ஆன்மீகமும், அரசியலும் நம் இரு கண்களே!
ஆன்மீக பலம் உள்ளவன் எவனோ
அவனே எல்லா துறைகளிலும் வெற்றியை தருபவன்.
நம் வீட்டு ஒற்றுமையே
நாட்டின் ஒற்றுமையை பறைசாற்றுமே!
இந்திய நாடு பழமையும், கலாச்சாரமும்
பண்பாடும் ஆன்மீகமும் கலந்த தேசம்.
இந்த புண்ணிய பூமியில் பிறப்பதும், வாழ்வதும்
நாம் பெற்ற மிகப்பெரிய வரம் ஆகும் .
28 மாநிலங்களின்
அந்த அந்த மொழிகள், கலாச்சாரங்கள் உள்ளடக்கிய
ஒரு நாடு உண்டென்றால்
நம் நெஞ்சை நிமிர்த்தி சொல்லலாம்.
என் மண் என் நாடு 'பாரதம்' என்று
நம் நெஞ்சை நிவர்த்தி மார்தட்டிக் கொள்ளலாம்.
இனி நம் ஒவ்வொருவரின் மூச்சுக்காற்றும்
சொல்ல வேண்டும் ஒற்றுமையை.
ஒற்றுமை என்றும் பலமாம்.
ஓதும் செயலே நலமாம்.
அவ்வை சொன்ன மொழியாம் .
அஃதே நமக்கு வழியாம்.
இனி நம் நாட்டின் ஒற்றுமையை
உலக நாடுகள் நம் வளர்ச்சியையும்
திரும்பிப் பார்க்க வேண்டும்.
வந்தே மாதரம்.



கவிஞர் ஆ.கிருஷ்ணவேணி,ஊத்தங்கரை

# பெருவாழ்வு

சேமித்த நினைவுகளை
அசைப் போட்டு பார்க்கையில்
அமைதியும் அருகிலே
உலாவித் திரியுது

மேகம் குழம்பி குலாவி
அங்கேயும் குழப்பம்
இறங்கி தெளிப்போமா
கடந்து போவோமா என

சின்னான் குருவி
ஒரு கவிதை வாசிக்குது
குளிருக்கு இணைத்தேடலின்
ராகமோ அது

நாவல் மரத்தின் இலைக்குள்
உறவாடிய பூசனிக்கொடி
பிரசவித்த காய் அங்குமிங்கும்
ஓர் நாட்டியம்
காற்று பாடிய பாட்டில்
சற்று மனம் மரத்து போகுது



ஒரு தாய் வயிற்று மக்கள்
பாசங்கள் புரண்ட மனது
வற்றிப்போகுது காலப்போக்கில்
மாயம்தான் என்ன

அம்மாவே அடுத்தவராகும் நிலை
தள்ளிவைக்க துடிக்கும் பிள்ளைகள்
மருமகள் மருவி மகளாகாது
தனிமைக் குடித்தனத்தை தேடுகிறது

நாளை என்பது வருமென்பதை
மறக்கும் மனங்கள்
மணக்க மறந்துபோகின்றன

யாரும் சரியானவர்கள் இல்லை
குறை நிறை நிறைந்த படைப்பில்

கொட்டிடும் வார்த்தைகளை
கட்டி வைக்காமல்
கலைத்து போட்டால் காணாமல் போகுமோ

முதியோர் இல்லத்தைவிட
கொடுமையின் உச்சம்
ஒருவரை தனித்து நிறுத்தி
தவிக்க வைப்பது

இதோ உன் பின்னாடியே
வருகிறேன் என்றது காலம்
விடாது துரத்தும் தாய் தந்தையின் கண்ணீர்

எங்கோ தொடங்கி எதில் முடிக்க
உள்ளத்தில் கமறல் உறைவிடம் தேடியதோ
கருவறை கலங்கி தவித்தால்
உயர்ந்தென்ன பயன்

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன்,திருப்பூண்டி

# காதல் மொழி

**1**

ஜன்னலைத் திறக்கிறேன்
சொல்லி விடுகிறது காற்று
சில்லென்ற
உன் வருகையை.

**2**

மழையை யாசிக்கிறேன்
நீ காட்டும் கருணையைப் போல
வானம் மேகத்திடம் மொழிகிறது

**3**

உனது மௌனத்தை மொழிபெயர்க்க
காற்றிடம் விளம்புகிறேன்
உன்னை தரிசித்தபின்
என்னைப் புறக்கணிக்கிறது.

**4**

எல்லா வழித்தடத்திலும்
நுகரப்படுகிறது
உன்னைச் சுமந்து சென்ற
பேருந்தின் வாசம்

**5**

குழந்தையின் சிணுங்கலென
அடம்பிடிக்கும் மனதை
கொஞ்சிக் கொண்டிருக்கிறது
எனைத் தாண்டிச் செல்லும் உன் நிழல்




அகர முதல

கவிஞர் இளையவன் சிவா,நரசிங்காபுரம்

# விநோத பறவை

கலைமகள்
கை பொருள் நான்
எப்போதும் எனை
மீட்டிக் கொண்டே இரு




பூபாளம் பாடும்
புல்லாங்குழல் நான்
உன் உதடுகள்
எப்போதும்
என் அருகிலேயே
இருக்கட்டும்

மடியில்
தலை சாய்த்து
மறுபடி பருகிட
வாய்ப்பில்லை
நீயே என் தாயாகிடு

என் மீசையொரு
விநோத பறவை
உன் மூச்சுக்காற்றே
அதற்கான இரை

ஐந்தறிவுடைய
அபூர்வமானவன் நான்
மன்னித்து விடு
மனிதர்களோடு
வாழ்த்தெரியாது எனக்கு

மரம், செடி, கொடிகளோடு
ப்ரியம் வளர்த்து
பேசி சிரித்திடும்
பேரன்புக்காரன் நான்

உறங்கிடும் போதும்
உயிர் பற்றும்
உன்னைத் தவிர
வேறென்ன
வேண்டும் எனக்கு !

கவிஞர் ஆர்.மோகன்ராஜ்

# அவமானம் அளித்தவர்களுக்கு நன்றி

அவமானம் எனும் ஆயுதம் கொண்டு
என் தன்மானத்தை தகர்த்து விட்டீர்கள்
வலிதானே வலித்துவிட்டு போகட்டும் என்று எண்ணினேன்
வலியின் இறுதியில் என்னுள் வைரக்கியம் பிறந்து விட்டது
அதுவே எனக்கான இலக்கையும்
அதற்கான வழியையும் வரைபடமாக்கி விட்டது
நீங்கள் இம்முறை என்னை கொஞ்சம்
அதிகமாக அவமான படுத்திவிட்டீர்கள் போல்
அதனால் தான் என் இலக்கை கண்டு கொண்டேன்
சிந்தனைகள் சிதைந்தாலும் அந்த சிதைவுகளில் கூட
சிற்பங்கள் தேடும் மங்கை நான்
அவமானத்தால் வீழ்ந்து விட போவதில்லை இவள்
அடுக்கடுக்காய் அவமானம் தந்தவர்களே
எதை கொண்டு என்னை தலை குனிய செய்தீர்களோ
அதையே தாரக மந்திரமாக்கி
உங்கள் முன் தலை நிமிரும் வரை
அணைய போவதில்லை என் வைராக்கியம்
என் வைராக்கியம் மற்றவர்களுக்கு திமிராக தெரியலாம்
எனக்கு மட்டுமே தெரியும்
என் தன்மானத்திற்கு எற்பட்ட காயத்திற்கு
நானிட்ட மருந்து என்று.




கவிஞர் பாத்திமா றிபானா ஜவ்பர்,இலங்கை

# முடிந்து போனவை

முடிந்து போனவையென
கடந்து போனவையுள் சில

மறந்து போன நினைவுகளில் நிழலாடுகின்றன
கரைந்து போகின்றன காற்றாக
உரைந்து போகின்றன சட்டென்று
ஏற்றுக்கொள்ளும் பொய்களாக
ஏற்கவியலா மெய்களாக
தொடங்குகின்றன முடிவாக
முடிந்து விடுகின்றன முதலாக

சத்தமிடும் உள்ளம் அறியா ஏதோவொன்றை
உரைத்துச் செல்கின்றன மௌனமாக

மறைத்து வைத்த மகத்துவங்கள்
மறந்து சென்ற வெறுமைகளாய்
புன்னகை எனும் புனைகதையாய்

எப்படி இருந்தாலும்
கடந்த காலமாய்
கடந்து போனவை எல்லாம்
முடிந்து போனவை இல்லை.



கவிஞர் கீர்த்தனா பு

# வனிதை வசிப்பாளோ

இந்நாரியின் தேகத்தில்
பட பட பட்டாம்பூச்சிகள்
சிறகடிக்க

புதுவசந்தமாய்
பூவுலகில்
பொக்கிஷமாய் விழித்திறக்க
நறுவீ மணத்தோடு

மௌவல் மலர் தூவியே
அலங்கரிக்க ஸ்பரிச மென்மையில்
முகையும் தோற்றதாய்
தரை சேர்ந்ததுவோ.



நலின நடையழகில்
மென் புன்முறுவலில்
ஆங்காங்கே விழி பார்வை பதித்தே
இமை அழகில்

பிறை அவனும் அவனியில்
அவள் பாதம் படிந்ததோ.
மதங்கி ஈர்ப்பில் மறவோன்
மயங்கியே பாதை மறக்க.

அகத்தோடு அழகில் விழி
பார்க்கா விறலியும்
நிறைந்த மலர்ச்சியில்
மதி மறைத்து கவியழகில்

கடிதத்தில் கனிந்து கரைந்து
மெழுகென உருகியே
அவன் ஓரிரு வரிகளில்
வனிதை அவளும் வசிப்பாளோ

ஏங்கியே திண்டுகளோடு
கனவிலே வாழ
அம்புலியோடு பயணமாய்.

கவிஞர் ச.கார்த்திகா,பழநி

# நதியொன்று

கடலிடை இருந்த புனல்
அனலாலே கலந்ததாலே மேகமாய்ப் போனதே.
காற்றுத் துரத்திட ஓடிய மஞ்சி
மலையியருகே போய் மறைந்ததே.
மேகம் கார்கூந்தல் விசிறிய விதத்தில்
மழையாகப் பொழிந்ததே.
மலையென வளர்ந்த தனங்கள்
நதியென தாய்ப்பால் சிந்துதே.
மலையிறங்கி வந்த நதி
காலிடறி விழுந்த பள்ளம் அருவியென்று ஆனதே.
காட்டுவழி கால்கடுக்க நடந்து வந்து
இளைப்பாறி இருந்த இடம் குளமென்று ஆனதே.
வளைந்து வந்த நதி வயல்வெளி புகுந்ததாலே
வெள்ளமாய்ப் போனதோ.
காடுகடந்து வந்து கடலோடு கடக்குமிடம்
முகத்துவாரமாகாதே.
வளரும் பயிர்க்கு தாகம் தீர்த்து
தண்ணீராய் போகுதே.
உயிர்களை எல்வாம் காவுவாங்கி
கண்ணீராய் கரையுதே.
இறைவன் மடியில் வாசம் சேர்த்தது
பன்னீராய் ஆகுதே.
பாவிமனிதன் பாவம் கரைக்க பாலாவி ஆனதே.
உழைக்கும் மனிதன் உடலைச் சேர்ந்து உதிரமாய் போயிடும்.
வியர்வை வழியே வெளியே வந்து முத்தென ஆயிடும்.
நிலத்தோடு நீந்தி மண்ணோடு கலந்ததாலே மண்ணீராய் மாறுது.
காசு கொடுத்து கடையில் வாங்கும் குடிநீராய்ப் போகுது.
செலவில்லாமல் செல்வந்தன் விற்க விலைபொருளாகுதே.
நதியில் கழிவை கொட்டுவது மனித வேலையாகிப் போகுதே.
சுயநலமின்றி தன்தொழிலை தானே செய்து போகுது. - நதி.
முறிந்த கிளைகள் மேல்தடவி
பூத்தூவி அலங்கரித்து வழியனுப்பி வைக்குது.
ஆழியில் சென்று ஆழம்பார் என்று.



கவிஞர் கோ.தனுசன்,மட்டக்களப்பு(இலங்கை)

# தொட்டில் கனவு

ஆசைப்பட்ட மண வாழ்க்கை
மகிழ்ச்சியாக வாழ எண்ணி
காத்திருந்த காதலுடன்
ஊர் கூட கரம் பிடித்தாள்

வேண்டி வைத்த வேண்டுதல்கள் பலவற்றில்
ஒவ்வொன்றாய் நிறைவேற்றிவிட
ஈர் ஐந்து மாதங்கள்
கரு சுமக்க வரம் கேட்டாள்

திட்டுக்கேன தலை சுற்றி மயங்கி வில
மனம் முழுக்க மகிழ்ச்சியாலே குதூகளித்தாள்

நிறை மாத நாள் நெருங்க
வலியாலே
விழிப்பிதிங்கி நிலை சரிய
அம்மான்னு சத்தம் கேக்க
திடுக்கிட்டு எழுந்து பார்த்தா

மடி கனமும் தெரியலையே
பிரசவ வலியும் அறியலையே

கண்ட கனவு கூட களஞ்சி போச்சு
கனவில் வந்த பூ முகமும் மறந்து போச்சு.

கனவு அது பலித்திடுமா
தொட்டில் வரமோ கிடைத்திடுமா?



கவிஞர் மா.பாலகுமரன்

# என் மகள்

அன்புதனை அடைக்கலமாக்கி
பாசத்தினை பறையிசையாக்கி

குதூகலகமாய் குழலினை இசைத்து
இன்னிசையாய் யாழினை மீட்டி

விந்தையாய் வீணை இசைத்து
சாமரந்தனை எழிலாய் வீசி


மயிலிறகால் வருடிய மலரே
எந்தன் மகளே உன் வரவு
என்றும் எனக்கு வரமே!



கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# புதுக்கவிதைப் புலவன்

காதலும் கடவுளும் பொருண்மை எனவே
கவிஞரும் புலவரும் கவிபாடும் காலமது;
மரபுக் கவியே மாந்தர்க் கவியாய்
மன்றங்கள் தோறும் வலம்வரும் நேரமது;
எதுகை மோனை இயைபென வேண்டும்
யாப்பிலக்கணத்தில் கவிகள் யாத்தல் வேண்டும்;
யாக்கும் புலவர்கள் இலக்கணம் கூற
முரணாய்த் தோன்றிய முண்டாசுக் கவியோ!
மரபை உடைத்துப் புதுமைப் படைத்தான்.
சொல்லும் புதிது பொருளும் புதிது;
சுவையும் புதிது வளமும் புதிது;
மரபைமீறியும் புதிய பரிணாமம் தந்தான்;
பாமரனுக்கும் நல்ல வெகுமானம் தந்தான்.
புதிய வடிவில் புரட்சியைத் தூண்டினான்;
விடுதலை வேள்வியில் எண்ணெயை ஊற்றினான்;
அடிமைப் பெண்ணின் விலங்கை அகற்றினான்.
புதுக்கவிதையைப் படைத்தப் புலவனும் இவனே!
புதுக்கவிதையைப் பெற்ற தந்தையும் இவனே!



கவிஞர் த.அருள் ஞானப்பிரகாசம்,சேத்தியாத்தோப்பு

# பயணம்

உலகம்
எனும்
பல வழிச்சாலையில்
குழந்தைகள்

குழந்தைகள்
எனும்
ஒரு வழிச்சாலையில்
பெற்றோர்கள்



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்,ஈரோடு

# காற்றாக கனலாகி வேற்றாகி விண்ணாகி

காற்றாகி வீசும்
கன்னித் தமிழே
முற்றாக மூச்சில்
முழுமதி ஆனாயே
பற்றோடு பிணைந்த
பண்பாட்டின் இலக்கணமே

உயிரோடு கலந்த
உணர்வான உயிரே
பயிர் போல
பாரில் செழுமையானாய்

கனலாகிக் கொள்கை கொண்ட
கலையான வண்டமிழே
வீனர்களைக் கொளுத்தி
வீழ்த்திட வீறுகொள்வாய்

கொற்றம் கொண்ட
கொடையான தமிழ்மொழியே
சுற்றமும் சுடரான
சூரிய ஜோதியே

வேற்றாகி நிற்காத
வேண்டலின் வரமே
கற்பகத் தருவே
கன்னலின் சுவையே



எப்போதும் நாவிலே
எழுச்சி கொள்வாயே
முப்போதும் எம்மை
முழுநேரம் ஆள்கிறாய்

விண்ணாகிப் படர்ந்த
விசித்திரக் கொடியே
மண்ணாகியும் மாண்பாகியும்
மகத்துவம் படைக்கின்றாய்

வரலாறு சொல்லும்
வரைபின் நெறிகளை
அறத்தின் வழிவந்த
அன்னைத்தமிழே வாழ்க
வாழிய வாழியவே

கவிஞர் கிருஷ் அபி

# கவியூற்றின் வாசல்கள்

பூவின் அரும்பிலும்
அரும்பின் நுனியிலும்
அதன்மேல் மொட்டிலும்
வாடியிறந்த சருகிலும்
மலையின் வளைவிலும்
நதியின் நெளிவிலும்
நீரின் தெளிவிலும்
நீ மெல்ல நுழைகிறாய்!

விழிகளில் தாளமிட்டு
வரிகளில் கோலமிட்டு
இதயத்தில் ஊற்றெடுத்து
இரத்த நாளங்களில்
குருதியாய் சுருதி சேர்த்து
நீ மெல்ல நுழைகிறாய்!

முன்றில் மண்ணிலும்
முளைக்கும் வேரிலும்
துளிர்த்த இலையிலும்
தளிரின் நிறத்திலும்
வானின் முகிலிலும்
நீந்தும் நிலவிலும்
நீலம் படர்ந்த வானிலும்
சாகசங்கள் பலபுரிந்து
நீ மெல்ல நுழைகிறாய்!

விழிகளில் தாளமிட்டு
வரிகளில் கோலமிட்டு
இதயத்தில் ஊற்றெடுத்து
இரத்த நாளங்களில்
குருதியாய் சுருதி சேர்த்து
நீ மெல்ல நுழைகிறாய்!

நாளின் விடியலிலும்
நாழிகை நகர்வுகளிலும்
நின் பார்வைகளிலும்
நிஜக்கனாக்களிலும்
நீண்ட பாதைகளிலும்
பகலின் ஓரத்திலும்
நிலவின் சயனத்திலும்
பார்வைத்தொடுகையிலும்
கருவிழிக் குவியலிலும்
நீ மெல்ல நுழைகிறாய்!



விழிகளில் தாளமிட்டு
வரிகளில் கோலமிட்டு
இதயத்தில் ஊற்றெடுத்து
இரத்த நாளங்களில்
குருதியாய் சுருதி சேர்த்து
நீ மெல்ல நுழைகிறாய்!

கவிஞர் செண்பகச்சோலையாள் ஆய்ஷ்,இலங்கை

# வேனிற்காலத் தூறல்

ஒற்றுமை பூக்களை
ஏந்திநிற்கும் பாலைவன பூமியில்
பல வெளிநாட்டு
வண்ணத்துப்பூச்சிகள்

மாலை வணக்க குறுஞ்செய்தி
அனுப்பும் சூரியன்
நட்சத்திரப் பிள்ளைகளைப்
பெற்றெடுக்கும் தாய்வானம்

பிரிவு முட்மரத்தில்
காயும் ஒரு பூநெஞ்சம்
வாடகை மகிழுந்தில் பயணம்

தேனீர் அளிக்கும் ஓட்டுநர்
நன்றிமழை பொழிய பொழிய
முளைவிடும் உறவுக்குருத்து

கொரோனா எரிமலைக்குழம்பின்
கரும்புகையில் நிரந்தரமாய்
மறைந்த கருவுற்ற நிலவு
ஒளிர்கிறது
இடம்பெயர்ந்த அன்றிலின்
நினைவுப் பக்கங்களில்

கண்ணீர்சொற்களின் மனவானில்
தன்னம்பிக்கை விடிவெள்ளிகள்
கண்திறக்க பிடிக்கிறேன்
அல்லா ஆறுமுகனின் கரங்களை




இதழ்வானலிருந்து விழும்
இன்சா அல்லவெனும்
இறைத்தூறலில் நனைந்தநெஞ்சங்களின்
பயண முடிவில்
தொடங்கும் புதிய உலகம்

கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல்,துபாய்

# பொறுமையே போர்க்களம்

விதி என்ற நதியில் கதி கலங்குதே கண்ணீர்
காயம்பட்ட நெஞ்சங்களில் குருதி துளி சிதறல்கள்

வறுமையும் வெறுமையும் வாழ்க்கையில் பொறுமை மீறி
யாரால் யார் யார் ஏன் ஏனோ என்னும் ஏக்க பாசறைகள்



பழிக்குப் பழி பாவ செயல் விழி
குற்றமும் குணமும் கூத்தாடுதே கூரை வீட்டின் ஓரம்

அல்லல்ல குறையவில்லை ஏழைகளின் வாய்மொழி
பாதையும் இல்லை பயமும் இல்லை பங்காளி

நிபந்தனையில் நீதியும் வழக்கும் வர்ணம் பூசும்
வானவில் ஓவியம் போல் பல வண்ணங்கள் மனித எண்ணங்கள்
பொறுத்ததும் பொறுமை இழந்ததும் ஆறடி நிலத்திற்கே

புண்ணிய கடல் தீண்டலில் தீமை வெள்ளம் ஓங்குதே தினம்
பொறுமை இழந்து இழந்து ஒவ்வொரு சூழ்நிலை தாக்கத்திலும்

மறந்த மனித மாண்பில் தினம் மறக்கும் மனித மாண்பில்
சித்தாந்தம் சீமை வெள்ளம் போல் சிரிப்பாய்தே போர்க்களமாய்
தினம் தினம் சங்கீத தத்துவத்தில்

கவிஞர் ம.செல்லமுத்து,நூத்தப்பூர்

# வாழ்க்கை என்னும் கவிதை

## அத்தியாயம் - 9

பெருமூச்சு விட்ட சிவா, சிகரெட் பாக்கெட்டை எடுத்து ஒரு சிகரெட் எடுத்து பற்ற வைத்துக் கொண்டு கதவைத் திறந்து மேலேறி மொட்டை மாடியில் நின்று புகையை இழுத்து காற்றில் ஊதினான்.

மனதிற்குள் புன்னகை எழுந்தது. 'திவ்யாவை எப்படி வளர்க்கப் போகிறோம்' என்று தேவகி இறந்த போது திக்கித் திணறி நின்ற நேரத்தில் கூட புவனாவை திருமணம் செய்யப் போகிறோம் அவள்தான் திவ்யாவை வளர்க்கப் போகிறாள் என்பது தெரியவில்லை. என்னுடைய வாழ்க்கையில் என்ன வெல்லாமோ நடந்து விட்டது.' என்று எண்ணிக் கொண்டு திரும்பவும் புகையை இழுத்து விட்டான்.

கீழே நண்பர்களோடு சீட்டு விளையாடிக் கொண்டிருந்த சிவாவின் தம்பி மொட்டை மாடியில் புகை கருவதைக் கவனித்தவன் "ஒரு ஆட்டம் போடுங்கப்பா நான் இப்ப வருகிறேன்" என்று சொல்லி விட்டு மாடிக்கு வந்தான்.

"அண்ணா எனக்கொரு சிகரெட் கொடுங்க" என்றான். சிவாவின் அருகில் வந்து.

"எங்கிட்டயே சிகரெட் கேக்குற அளவுக்கு பெரியாளாகி வீட்டீர்கள் இல்லையா?" என்று பாக்கெட்டிலிருந்து ஒரு சிகரெட்டையும் தீப்பெட்டியையும் எடுத்து நீட்டினான்.

சிகரெட்டை வாங்கிக் கொண்ட பாலு "என்ன அண்ணா ஏதாவது பிரச்சினையா? நான் சின்னப்பையன் தான் எதுவும் கேட்கக் கூடாது தான். இருந்தாலும் இப்படி நீங்கள் மொட்டை மாடியில் வந்து சிகரெட் குடிப்பதைப் பார்க்கும் போது கொஞ்சம் வருத்தமாக இருந்தது." என்றான் சிகரெட் பற்ற வைத்துக் கொண்டு.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. என்னடா வாடை அடிக்குது. கல்யாண பார்ட்டியா?; சரி சரி போய் சீட்டு விளையாடு கொஞ்சம் காற்று வாங்கத்தான் மொட்டை மாடிக்கு வந்தேன். வேற ஒன்றும் பிரச்சினை இல்லை."

"என்னிடம் சொல்ல விருப்பமில்லை என்றால் சொல்ல வேண்டாம்"

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை பாலு. ஒன்றும் பிரச்சினை இல்லை. அங்கே சிகரெட் குடித்தால் அரை முழுவதும் புகையாகும் என்றுதான் மொட்டை மாடிக்கு ........

"நான் போய் படுக்கிறேன். நீ போ" என்றான் சிவா.

இரஜகை நிலவன்

# வாழ்க்கை என்னும் கவிதை

## அத்தியாயம் - 9

சிகரெட்டை முடித்து விட்டு சிவா படுக்கையறைக்குள் நுழைந்த சப்தம் கேட்டு விழித்தெழுந்த புவனா "ஸாரிங்க திவ்யாவிற்கு கதை சொல்லிக் கொண்டிருந்தேனா களைப்பு வேறே உடம்பை அசத்தி விட்டது அயர்ந்து தூங்கி விட்டேன். ரொம்ப ஸாரி" என்று பதைப் பதைப்புடன் எழுந்தாள்.

''பரவாயில்லை புவனா தூங்கு.''

''என் மேல் வருத்தமில்லையே''

''கண்டிப்பாக இல்லை, சேலையை சரியாக மூடிக்கொண்டு தூங்கு" என்று சொல்லி விட்டு தலையணையை எடுத்து வெறுந்தரையில் போட்டுக் கொண்டு படுத்துக் கொண்டான் சிவா.



...தொடரும்

இரஜகை நிலவன்

# ஔவையார்

கட்டுரை




ஔவையார் நன்கு அறிமுகமான ஒரு பெண் புலவர். ஔவையார் என்னும் பெயர் கொண்ட புலவர்கள் பலர் இருந்தனர். நூலமைதி, தமிழ்நடை, தொடர்புடையோர் முதலானவற்றைக் கருத்தில் கொண்டு வரலாற்று நோக்கில் பார்க்கும்போது அவர்கள் வெவ்வேறு காலத்தில் வாழ்ந்தவர்கள் என்பது புலனாகும். ஒளவையார் எனும் தமிழ் மூதாட்டியாரின் பெயரை அறியாத தமிழ் மக்களே இரார் எனலாம்.

சங்க காலத்தில் வாழ்ந்த ஒளவையார் தமிழ்நாடு முழுவதும் காலால் நடந்தே திரிந்தார் என சொல்லப்படுகிறது. பலபேரரசர்களையும் சிற்றரசர்களையும் நேரில் சென்று, பாடி பரிசில் பெற்று வந்தவர் அவர்.

அவர் பாடிய பாடல்கள் அகநானூற்றில் நான்கும், குறுந்தொகையில் பதினைந்தும், நற்றிணையில் ஏழும், புறநானூற்றில் முப்பத்து மூன்றும், இவர் பாடிய பாடல்களாகக் காணப்படுகின்றன. சங்க கால இலக்கியத்தொகுதியில் எட்டுத்தொகையில் ஐம்பத்தொன்று இவரது பாடல்களாகத் திகழ்கின்றன.

ஒளவையார் பல நாடுகள் சுற்றி அனுபவம் பெற்றவராதலால் ஒரு நல்ல நாடு எதுவென்றால், நல்ல மக்கள் வாழ்கின்ற இடம் எதுவோ அதுவே நல்ல நாடு, என்று இலக்கணம் கூறுகிறார். அந்தப் பாடல் புறநானூற்றில் உளளது. அது :

நாடாகு ஒன்றோ, காடாகு ஒன்றோ, அவலாகு ஒன்றோ, மிசையாகு ஒன்றோ,
ஏவழி நல்லவர் ஆடவர்? அவ்வழி நல்லை வாழிய நிலனே! - (புறம் 187) என்கிறார்.

# ஔவையார்

## கட்டுரை

ஒரு முறை, கடையெழுவள்ளல்களில் ஒருவரான பாரி வள்ளலைப் போன்ற பரந்த மனப்பாண்மையும் கூர்த்த மதியும் படைத்த குறு நில மன்னனான அதியமானிடம் ஔவையார் சென்றார். பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒரு முறை பழுக்கும் நெல்லிக்கனியை, மிகப்பெரிய இருமலைகளுக்கு இடையில் ஆழமான பள்ளத்தின் ஊடே கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு அப்பழத்தைக் கொண்டு வந்து வைத்திருந்து அதை ஒளவையாரிடம் கொடுத்து உண்ணச் சொன்னான்.

அவனது வற்புறுத்தலால் ஔவை அதை உண்டார். உண்டபின் அக்கனியைப் பற்றி வினவினார் ஒளவை, "அம்மா இக்கனியை உண்டவர் நோய் நொடியின்றி நீண்டகாலம் இவ்வுலகில் உயிர்வாழலாம். அமிழ்தம் போன்ற பலனைத்தரவல்லது இந்த நெல்லிக்கனி" என்று பகர்ந்தான் அதியமான். அதைக்கேட்டு, "அரசனாகிய நீ உண்டு நீண்ட காலம் உயிர்வாழ்ந்தால் குடிமக்களுக்கு நன்மை உண்டாகும். கிழவியாகிய எனக்கு ஏன் கொடுத்தாய்?" என்று கேட்டார் ஒளவை.



"அம்மா நான் மடிந்து போனால் ஆயிரமாயிரம் மன்னர்கள் தோன்றலாம். ஆனால் நீங்கள் உயிர் வாழ்ந்தால் தமிழும் தமிழர்களும் உயிர்வாழ்வர். மேன்மை அடைவர்" என்றார் அதியமான்.

’பாற்கடலின் விசத்தை உண்டு மக்களையும் தேவர்களையும் வாழவைத்த சிவபெருமானைப் போன்று நீ நீண்ட காலம் இவ்வுலகில் வாழவேண்டுமென’ வாழ்த்தினார் ஒளவை. அவ்வரிகள்

பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி நீலமணிமிடற்று ஒருவன் போல

மன்னுக பெரும நீயே என்று அதியமானை வாழ்த்தினார் ஔவையார்.

அகர முதல இலக்கிய பேரவை
அகமும் தமிழே! முகமும் தமிழே!!

# ஔவையார்

## கட்டுரை

’சிவபெருமானான அந்த நீல கண்டனைப்போல் நீ வாழ்வாயாக’ என்று வாழ்த்திய ஔவையாரின் இந்தப் பண்பு அவர் தமிழ் மீது கொண்டிருந்த பற்றும் பாசமும் தமிழுக்கு அவர் செய்த தொண்டும்,
மன்னர்களும் தமிழைப் போற்றிப்போதுகாத்து வளர்த்துத் தொண்டு செய்யத் தூண்டியவர் ஔவையார் என்பது இச்செயலின் மூலம் நமக்குப் புலப்படுகிறது அல்லவா?

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் சங்க காலத்தில் வாழ்ந்த வீரத்திலும் கொடையிலும் சிறந்து விளங்கிய, தகடூரை ஆண்ட சிறந்த சிற்றரசனான அதியமானுக்கும் தொண்டை மானுக்கும் கடும்போர் நிகழ இருந்தது. அதியமானின் நண்பராகவும், அரசியல் ஆலோசகராகவும், தமிழ் கவிஞராகவும் திகழ்ந்த ஔவையார் தொண்டைமானிடம் அரசியல் தூதுவராகச் சென்று அப்போரைத் தடுத்து இன்மொழிகள் பேசி நிறுத்தினார். அத்தகைய சமாதானத்தூதுவராகத் திகழ்ந்த ஔவையார் அதியமானின் கொடைத்தன்மையைப் பற்றி ஒரு பாடலில் குறிப்பிடுகிறார்.

"ஒரு நாள் செல்லலம், இருநாள் செல்லலம் பலநாள் பயின்று பலரொடு செல்லினும் தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ" (புறம்-101) என்று பாராட்டுகிறார் அத்தமிழ் மகள்.

சங்க காலத்தில் ஔவையார் பாடிய பாடல்கள்:
அகத்தில் 4; புறத்தில் 33 நற்றிணையில் - 7; குறுந்தொகையில் - 15 ஆகக் கிடைத்தவை 59 பாடல்களேயாகும். தமிழுக்குத் தொண்டு செய்த தமிழ்ச் செல்வி ஔவையாரை நம் தமிழ் இனம் என்றென்றும் போற்றி வாழ்த்தும் என்பதில் ஐயமில்லை.

நன்றி
தமிழ் வளர்த்த தமிழ்த் தொண்டர்கள் - டாக்டர் அறிவுச்சுடர்


அகர முதல நாளை நமதே
அகர முதல
உரக்க சொல்வோம்
முடிந்த பிரச்சினைகளை
நினைத்து கவலை
அடைவதை நிறுத்தி விட்டு
வரும் காலத்தை துணிந்து
தன்னம்பிக்கையுடன்
எதிர்த்து நில்லுங்கள்.
Aagaramuthalaa
www.அகரமுதல.com

அகமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை
அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.


தொடர்பிற்கு:
9597887847/8870884969

www.அகரமுதல.com

agaramuthalaa

aagaramuthala@gmail.com